[1974 மார்ச் 9

திருமூர்த்தி நீர் வீழ்ச்சியில் வெள்ளம்.

*342 வின—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்ற 1973 அக்டோபர் 26-ம் தேதி உடுமலைப்பேட்டை திருமூர்த்தி நகர் நீர்விழ்ச்சியில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தின் காரணமாக உயிரிழந்தவர் எத்தனை பேர் ?

(இ) திடீர் வெள்ளத்தின் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இருவர்.

(இ) தலத்தில் பெய்த மழை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, தலத்தில் ஏற்பட்ட மழையின் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதற்காக மக்களை மழை காலங்களில் ஜாக்கிரதையாக இருக்கும்படி கூற அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறதா ? இப்படிப்பட்ட விபத்துகள் நிகழாவண்ணம் இருப்பதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்து இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : காட்டாற்றில் திடீரென்று வெள்ளம் வந்து விட்டது. திருமூர்த்திநகர் என்னுடைய தொகுதியில்தான் இருக்கிறது. அவர்கள் குளித்துக் கொண்டிருந்தபோது அதிகமாகத் தண்ணீர் வந்து விட்டதால் இந்த விபத்து ஏற்பட்டது. அதிலே 8 பேர் அடித்துச் செல்லப்பட்டு, 6 பேரைக் காப்பாற்றியிருக்கிறார்கள். இரண்டு பேர்கள் உயிரிழந்து இருக்கிறார்கள். திடீரென்று ஏற்படும் விபத்துக்களுக்கு அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது.

மேலைச்சொறிக்குளம் சாலை.

*343 வின—திரு. த. சோனையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மதுரை–மண்டபம் நெடுஞ்சாலையில் இருந்து மேலைச்சொறிக்குளம் வரை தார் ரோடு போடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.